பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 23உ (7—7—67) வெள்ளி ★ வெளியூர்: ஆனி 24உ (8—7—67) சனி [இதழ்: 20

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியான நிவாரணம்

அனைத்துக் கட்சிக் குழுவைக் கூட்டி அண்ணா ஆலோசனை

தீ விபத்துப் பற்றிய சட்டமன்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு முதலமைச்சர் விளக்கம்

சென்னை, சூலை 7—

சென்னையில் தொடர்ந்து நடந்துவரும் தீ விபத்துக்கள் குறித்து இன்றும் சட்டமன்றத்தில் இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமனும், இடதுசாரி கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமனும் இத்தீர்மானங்களைக் கொண்டுவந்திருந்தனர்.

இத்தீர்மானங்களுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பதிலளித்தபின், அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தீர்மானங்களைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"இது, அரசியல் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட பிரச்சினையல்ல—உட்பட்டதுதான். இந்தப் பிரச்சினையில் அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் முதலமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

"மேலும், ஒரு காரியத்தைப்பற்றிப் பல முறை—பேசவேண்டிய அளவுக்குப் பேசப்பட்டு விட்டால், அதைப்பற்றி மீண்டும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர முடியாது; எனவே, இத்தீர்மானங்களைத் தள்ளுபடி செய்கிறேன்."

திரு. பி. ஜி. கருத்திருமன் தமது தீர்மானத்தை வலியுறுத்திப் பேசுகையில், சட்டம் அமைதி கெட்டு விட்டதாகவும், மக்கள் தெருவில் நடமாடவே அஞ்சுவதாகவும்குறிப்பிட்டார்.

வி. கே. கோதண்டராமன்

திரு. வி. கே. கோதண்டராமன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலோர் கைவண்டி வியாபாரம் செய்வோரும், சிறு சிறு வியாபாரம் செய்வோரும், தொழிலாளரும் ஆவர். அவர்களுக்கெல்லாம் தக்கவிதத்தில் உதவி செய்ய வேண்டும்.

"கைவண்டி இழந்தோருக்கு மீண்டும் கைவண்டி வாங்கிக்கொடுக்கவும், மீண்டும் வியாபாரம் செய்யப் பணயுதவி செய்யவும் தொழில் இழந்தவர்களுக்கு மீண்டும் அவரவர் தொழில்களைச் செய்யத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுக்கவும் வழி செய்யவேண்டும். உதவித் திட்டத்தின்கீழேயே இந்தப் பண உதவியைச் செய்யலாம்.

"ரேஷன் கார்டுகள் புதிதாக வாங்கவேண்டுமென்றால் அவர்கள் ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டி விண்ணப்பம் கொடுக்க வேண்டியுள்ளது. எந்தக் கட்டணமும் வசூலிக்காமல் அவர்களுக்குப் புதிய ரேஷன் கார்டு வழங்க உத்தரவிடவேண்டும்.

"வீடிழந்த அனைவருக்கும் ரூ. 10—20 இலட்சம் செலவானாலும் சரி, மத்திய அரசு உதவினாலும் உதவாவிட்டாலும் சரி—பொதுமக்களிடம் வசூலித்தோ, இந்த அரசே செலவிட்டோ, ஒரே வார காலத்தில் வீடு கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

"மீண்டும் தீப்பிடிக்காதவாறு நல்ல 'ஜிங் ஷீட்' கூரை போட்ட வீடாகக் கட்டித்தர வேண்டும்."

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"திரு. கோதண்டராமன் கூறிய யோசனைகளெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆவன செய்யப்படும்.

"ரேஷன் கார்டு பெற ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டவேண்டும் என்ற விதி ஏற்கனவே இருந்தாலும் அதை நிறுத்திவைத்து, உடனடியாக எந்தக் கட்டணமும் வசூலிக்காமல் ரேஷன் கார்டு கொடுக்கும்படி நேற்றே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

"மீண்டும் வீடு கட்டிக்கொடுக்கப்படுவது பற்றியும், மறுவாழ்வு அளிப்பது பற்றியும் ஆராய எல்லாக் கட்சியினரையும் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது; அந்தக் குழுவை பிற்பகல் கூட்டுகிறேன். அதில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அதில் தக்க யோசனைகள் கூறினால் பரிசீலிக்கப்படும்; இதற்காகச் சபையை இப்போது ஒத்திவைக்க தேவையில்லை எனக் கருதுகிறேன்."

(5-ம் பத்தி தொடர்ச்சி)

கள் வயிற்றுப் பிழைப்புக்காரர்கள் என்று முதன்மந்திரி சொன்னது சட்டசபையில் பணியாற்றும் மீதி 49 காங்கிரசு மெம்பர்களையும் இழிவுபடுத்துவதாகும்' என்று உள்ள வாசகம் சட்டமன்ற நடவடிக்கைகளைத் திரித்துக் கூறுவதாகும்"

என்று எடுத்துக்காட்டிய திரு. ஹண்டே, அதே ஏட்டில், 6-7 67 சட்டமன்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் அண்ணா பேசியதாக வெளிவந்துள்ள பேச்சின் பகுதியையும், சட்டமன்ற நிகழ்ச்சிப் பதிவேட்டில் பகுதிவாகியுள்ள பகுதியையும் படித்துக் காட்டி, கருத்திருமன் அறிக்கையின் வாசகம் முற்றிலும் முரண்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

திரு. கருத்திருமன் எழுந்து, தாம் அப்படிச் சொல்லவில்லை என்றும், முதலமைச்சர் காங்கிரசுக் கட்சிக்காரர்களைப் பிரித்துப் பேசியதாகத் தான் குறிப்பிட்டதாகவும் விளக்கம் கூறினார்.

உடனே திரு. ஹண்டே எழுந்து, பத்திரிகையில் அப்படி இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

இதுபற்றிய தமது தீர்ப்பை திங்கட்கிழமை அறிவிப்பதாகஅவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் கூறினார்.

போலீசுக் கமிஷனர் சிங்காரவேலு மீது உரிமைப் பிரச்சினை

சட்ட மன்றத்தில் எழுப்பப்பட்டது

திங்களன்று தீர்ப்பு

சென்னை, சூலை 7—

சென்னைப் போலீசுக் கமிஷனர் திரு. சிங்காரவேலு மீது இன்று சட்டமன்றத்தில் ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டது.

இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் கொண்டுவந்த இந்த உரிமைப் பிரச்சினைமீது திங்கட்கிழமை தீர்ப்புக் கூறுவதாக அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அறிவித்தார்.

தற்போது சென்னை நகரில் நடந்த தீ விபத்துக்கள்பற்றி போலீசுத் தலைமை அதிகாரி (ஐ. ஜி.) விடுத்துள்ள அறிக்கையில், 'சதித் திட்டம் இருப்பதாக'க் குறிப்பிட்டிருக்கிறார். அதே நேரத்தில் சென்னைப் போலீசுக் கமிஷனர் விடுத்துள்ள அறிக்கையில், 'இது தற்செயலாக நடக்கும் விபத்துக்களே' என்றும் சென்ற ஆண்டு சூன்—சூலை மாதங்களில் 67 விபத்துக்கள் நடந்ததாகவும், இவ்வாண்டு அவ்வளவு நடக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

"இந்த இரு அதிகாரிகளின் அறிக்கைகளிலும் முரண்பட்ட நிலை ஏற்பட்டிருந்தாலும், கமிஷனர் இவ்விதம் கூறியிருப்பது, நாட்டில் மேலும் இத்தகைய நாசவேலைகள் நடக்க ஊக்கமளிப்பதாக இருப்பதாலும், இந்த அவையில் உள்ளவர்களின் உரிமையையும் பாதிப்பதாக இருப்பதாலும், இதனை உரிமைக் குழுவுக்கு விட வேண்டுகிறேன்"

என்று திரு. வி. கே. கோதண்டராமன் குறிப்பிட்டார்.

இந்த இரு வேறு அறிக்கைகளில் உள்ள குறிப்பிட்ட முரண்பாடான வாசகங்களையும் அவர் படித்துக் காண்பித்தார்.

அவைத் தலைவர் திரு. ஆதித்தனார், இதுபற்றித் தாம் முழு அளவில் ஆராயவேண்டியுள்ளது என்றும், தொடர்புடைய அதிகாரிகளுக்குச் செய்தியாளர்கள் மாநாட்டைக் கூட்டி அறிக்கை விடுக்க உரிமை இருக்கிறதா என்பதையும் மற்றும்அவர்களுக்குள்ள உரிமைகளையும் அறிந்து தக்க முடிவெடுக்கவேண்டியுள்ளது என்றும், நாளையும் மறுநாளும் அரசு விடுமுறையாகையால், திங்கட்கிழமை தமது தீர்ப்பைக் கூறுவதாகவும் அறிவித்தார்.

'நவசக்தி' செய்தி மீது உரிமைப் பிரச்சினை

கருத்திருமன்மீது ஹண்டே எழுப்பினார்

சென்னை, சூலை 7—

காங்கிரசு ஏடான 'நவசக்தி' செய்தியையொட்டி கருத்திருமன்மீது இன்று சட்டமன்றத்தில் ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டது.

சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த திரு. எச். வி. ஹண்டே இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.

நேற்று (6—7—67) சட்டமன்றத்திலிருந்து காங்கிரசுக் கட்சியினர் வெளிநடப்புச் செய்தது குறித்து, எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் வெளியிட்டுள்ளதாக அந்த ஏட்டில் வெளியாகியிருக்கும் அறிக்கையில்,

"'காமராஜ், பக்தவத்சலம், கருத்திருமன் தவிர, மற்றவர்

(1-ம் பத்தி பார்க்க)

தீ விபத்தினால் எழும் ஐயம்

இன்ஸ்பெக்டர்--ஜெனரல் தரும் விளக்கம்

சென்னை, சூலை 6—

"கடந்த சிலநாட்களாக சென்னை நகரில் தொடர்ந்து அடிக்கடி ஏற்பட்டு வரும் தீவிபத்துக்கள் பற்றி, முதலில், இவைகள் 'விபத்துக்கள்' என்றே காவல் துறையினரால் கருதப்பட்டது; ஆனால், இப்போது அதன் தன்மையை ஆராயும்போது சந்தேகம் எழுகிறது; இந்நிகழ்ச்சிகளின் பின்னால் பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது"

என்று, போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அருள் கூறியுள்ளார்.

இந்தத் தீ விபத்துக்களுக்குக் காரணமாக உள்ளவர்களைக் கண்டறிந்து விசாரித்து விசாரணை செய்ய இலஞ்ச ஒழிப்புத் துறை போலீசு அதிகாரி ஆர். என். கிருஷ்ணசாமியை தமிழக அரசு நியமித்துள்ளது; அவருக்குத் துணையாளர்களாக மூன்று இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்தீ விபத்துக்களைத் தடுப்பதற்கென கடலூர், சேலம், வேலூர், அம்பத்தூர் ஆகிய இடங்களிலிருந்து ஆறு தீயணைப்புப் படையினர் நகருக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்.

"மயிலாப்பூர் பகுதியில் தீயணைப்பு எஞ்சின்கள் முன்பு இருந்ததைவிட இரு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன" என அருள் கூறினார்.

முதலமைச்சரின் நிவாரணநிதி--நன்கொடை குவிகிறது

தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வளிக்க முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நன்கொடைகள் குவிந்தவண்ணமிருக்கின்றன.

வியாழக்கிழமை பிற்பகலில் ஒரு மணி நேரத்துக்குள் இரண்டரை இலட்சம் ரூபாய்க்குமேல் சேர்ந்துவிட்டது.

சிலர் தொகைகளைக் கொடுத்துவிட்டார்கள்; மற்றும் சிலர் கொடுப்பதாக வாக்களித்திருக்கின்றனர்.

அனைத்துக் கட்சிக் குழு

சென்னை, சூலை 6—

சென்னை நகரில் தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றி அரசுக்கு யோசனை கூற, முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஒரு அனைத்துக் கட்சிக் குழு அமைத்துள்ளார்.

இக்குழுவுக்கு அறிஞர் அண்ணா தலைவராக இருப்பார்.

மற்ற உறுப்பினர்கள் வருமாறு: சட்டமன்றத் தலைவர், மேலவைத் தலைவர், பி.ஜி. கருத்திருமன்(காங்), பி. கே. மூக்கையாத் தேவர் (சுத), ஏ. பாலசுப்பிரமணியம்(இ.பொது), ஏ. கே. சுப்பையா (வ. பொது), டாக்டர் அபிபுல்லாபேக் (லீக்), ஏ. ஆர். மாரிமுத்து (பி. சோ), கே. ஆர். நல்லசிவம் (ச.சோ), ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்), கே.பி.எஸ். மணி(குடியரசுக்கட்சி).

வருவாய் தரும் தொழில்கள் எங்கே?

முந்திய அரசு வளர்த்த தொழில்கள் தெரியாதா?

காங்கிரசார் குற்றச்சாட்டுக்கு அண்ணா பதில்

முன்பிருந்த காங்கிரசு ஆட்சி, தமிழகத்தில் எத்தகைய தொழில்களை வளர்த்தது என்பதையும், வருவாய் தரும் தொழில்களெல்லாம் யாரிடத்திலே உள்ளன என்பதையும் எடுத்துக்காட்டி அறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்திருக்கிறார்.

தமிழக அரசின் வரவு.செலவுத் திட்டத்தின் மீது சட்டமன்றத்தில் நடந்த பொது விவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதிகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன; அவற்றின் தொடர்ச்சி இது:—

பொருத்தமாகச் சொல்ல வேண்டாமா?

"நாங்கள் தொழிலை வளர்த்திருக்கிறோம்—நீங்கள் தொழிலை வளர்க்க ஒன்றுமே செய்யவில்லை" என்று சொன்னார்கள்.

"நாங்கள் தொழிலை வளர்த்திருக்கிறோம்" என்று மத்திய அரசையும் இணைத்துத்தான் சொன்னார்கள்.

முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்கள் சொன்னபடி சொன்னால், அதில் பொருத்தம் இருக்கிறது. அவர், 'பெரம்பூரிலே இல்லையா? திருச்சியிலே இல்லையா? நெய்வேலியிலே இல்லையா?' என்றெல்லாம் சொன்னார். நான்கூட பல கூட்டங்களில் சொன்னதுண்டு.

ஒரு பெரிய மாளிகையில் பணியாற்றுபவன் வீட்டுக்கு வந்து சொன்னானாம்—'ஆறு வெள்ளித் தம்ளரைத் துடைத்து வைத்தேன்; எட்டு இரத்தின ஜமுக்காளங்களை மடித்து வைத்தேன்; மூன்று இரும்புப் பெட்டியைத் தூக்கி வைத்தேன்' என்று!

'யாருடையது?' என்று அவனைக் கேட்டபோது, 'எசமானருடையது' என்று சொன்னானாம்.

அதைப்போல், 'பெரம்பூரில் இல்லையா? நெய்வேலியில் இல்லையா?' என்று சொல்லலாம்.

எங்களுக்குத் தெரிந்தவரையில், அதெல்லாம் எசமான் வீட்டு இரும்புப் பெட்டியாகத் தெரிகிறதே தவிர, நம்முடைய வீட்டுச் சாதாரணப் பெட்டியாகத் தெரியவில்லை!

அரசுத் துறையில் வளர்ந்தது என்ன?

'தொழில்களை வளர்த்திருக்கிறோம்' என்றால், இந்த மாநில அரசுத் துறையில் நாம் வளர்த்திருக்கிற தொழில்கள் என்ன? எவ்வளவு?

சிறு கைத்தொழிலை வளர்த்திருக்கிறோம்—கூடை முடைகிறோம்; பாய் முடைகிறோம்; கேலிக்குச் சொல்லவில்லை—பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்தது; அதை, 'இல்லை' என்று சொல்லவில்லை.

ஆனால், நிரம்ப வருவாய் தரத்தக்க தொழில் நம்முடைய மாநில அரசுத் துறையில் இல்லை.

முன்னாலே இருந்ததெல்லாம், தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கின்ற தொழில்களுக்கு, அரசினர் ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள்—பணம் கொடுத்திருக்கிறார்கள்.

ஆதாரத்திற்கு அவை அடிப்படையல்ல!

அதைத்தான் நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் சொன்னார்கள். நான் அவருடைய பேச்சை அன்றையத்தினம்தான் கேட்டேன்; அதற்குமுன்னாலே கேட்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில்லை.

பல காங்கிரசுக்காரர்கள் என்னோடு பழகியவர்கள் உண்டு; ஆனால் திரு. பூவராகன் அவர்கள் சற்று கூச்சப்படுபவர் போலிருக்கிறது—என்னோடு அவர்கள் முன்னால் பழகியதே இல்லை.

ஆகையால், அவருடைய பேச்சை அன்றையத்தினம் நான் ஒருதுளியும் குறுக்கீடு இல்லாமல் கேட்டதற்குக் காரணம் அவருடைய மனப்போக்கு எப்படித்தான் இருக்கிறது என்பதற்காகவும், முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் தான்.

அவர் சொன்னார்—'அம்பத்தூரில் சைக்கிள் கம்பெனி இருக்கிறதே - மூன்று இலட்சம் சைக்கிள் தயாராகிறதே - தெரியுமா? என்று.

உண்மையிலேயே தெரியும்; அங்கே மூன்று இலட்சம் சைக்கிள்கள் தயாராகின்றன.

இது அவர் சொல்லுவதல்ல; கனம் சுப்பிரமணியம் அவர்கள், ஆண்டிற்கு ஆண்டு நிதிநிலை அறிக்கையில் படிப்பார்கள்—'ஒரு இலட்சம் சைக்கிள்கள் தயாரிக்கப்பட்டுவந்த அம்பத்தூர் தொழிற்சாலையில் இந்த ஆண்டு 1,40,000 சைக்கிள்கள் தயாரிக்கப்பட்டிருப்பதை அறிந்து இந்த மன்றம் மகிழ்ச்சி அடையும் என்று கருதுகிறேன்' என்று.

மகிழ்ச்சியடைகிறோம் — 'இல்லை' என்று நான் சொல்லவில்லை; ஆனால், இவைகளெல்லாம் தொழில் வாய்ப்பு கொடுக்கின்ற வரையில் வரவேற்கத்தக்கது தான்; பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கிறது—விரும்பத்தக்கதுதான்.

ஆனால், இவைகளெல்லாம் அரசுத் துறைகள் அல்ல; அரசுக்கு வருமானம் தரத்தக்க துறைகள் அல்ல.

ஆகவே, ஏற்கனவே இருந்த அரசு எப்படி அரசுத் துறையிலே தொழில்களை ஆரம்பிக்கவில்லையோ அதைப்போல நாங்களும் இப்பொழுது ஆரம்பிக்கவில்லை.

"அப்படித்தானா? நீங்கள் ஆரம்பிக்கமாட்டீர்களா?" என்றால், நூறு நாட்களுக்குள் நாங்கள் அதை ஆரம்பிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அவ்வளவு விரும்பத்தக்கதல்ல என்றுதான் சொல்லவேண்டும்.

ஒன்றும் நடக்காமல் இருக்கவில்லையே!

"அப்படியானால், நீங்கள் ஒன்றுமே செய்யவில்லையா?" என்றால், நீங்கள், 'செய்யலாமா, வேண்டாமா' என்று தயக்கப்பட்டுக்கொண்டிருந்த இரஷ்ய நாட்டினுடைய கூட்டுறவோடு, அரக்கோணத்தில் ஆரம்பிக்க இருக்கிற வார்ப்படத் தொழிற்சாலைக்குப் பத்து நாட்களுக்கு முன்பாகக் கையொப்பமாகி, அரசுத் துறையிலே துவக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"சரி; நாங்கள் ஆரம்பித்ததைப் போல், தனிப்பட்ட முதலாளிகளுடைய தொழில்களையெல்லாம் நீங்கள் ஆரம்பித்தீர்களா?" என்றால், அது, இரண்டு நாட்களுக்கு முன்னால் முன்னாள் தொழில் அமைச்சர்—இந்நாள் தொழில் அமைச்சர் இரண்டு பேரும்—ஒரு திருமண வீட்டுக்கு விருந்துக்குப் போய் வருவதைப்போல்-ஒரு தொழிற்சாலைக்குப் போய்வந்தார்கள். திருமண வீடு என்றால் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்; அப்படித்தான் அங்கும் அனைவருமே மகிழ்ச்சியாக இருந்தார்கள்; அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்த முதலாளியும் மகிழ்ச்சியுடனிருந்தார்; 'இப்படிச் சில முதலாளிகள் கிடைத்திருக்கிறார்களே' என்று இந்நாள் தொழில் அமைச்சர் மகிழ்ச்சியுற்றார்; அந்நாள் தொழில் அமைச்சரும், 'ஆகா—அந்தக் காரியம் அப்படி நடக்கிறதே' என்று மகிழ்ச்சியடைந்தார். நான்கூடப் பத்திரிகையிலே பார்த்து, 'ஒரு புதிய தொழிற்சாலை வருகிறது' என்று மகிழ்ச்சியடைந்தேன். ஆக, ஒன்றும் நடக்காமல் போகவில்லை!

மனமயக்கம் உங்களுக்கு எதற்கு?

அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால், மேட்டூரிலே பிளாஸ்டிக் தொழிற்சாலையைத் துவக்கிற காரியத்திற்கு நானே போயிருந்தேன்.

அதற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, டாடா கம்பெனியால் ஆரம்பிக்கின்ற 'பெஸ்டிசைட்ஸ்' தொழிற்சாலையின் துவக்க விழாவிற்கும் நானே போயிருந்தேன்.

அதைப்போலவே, இண்டியா பிஸ்டன்ஸ் கம்பெனி தொழிற்சாலையை விரிவுபடுத்துகிற விழாவிற்கும் நான் போயிருந்தேன்.

அவற்றையெல்லாம் நான் இதிலே குறிப்பிடாததற்குக் காரணம், 'இவைகளெல்லாம் அரசுத் துறையிலே இல்லையே' என்பனால்தான், அடக்கத்தோடு அதை நாங்கள் குறிப்பிடவில்லை.

நீங்கள் கடையிலே உள்ள எல்லாச் சரக்குகளையும் குறிப்பிட வேண்டும் எனறு எண்ணிக் கொண்டிருப்பீர்களானால், அதை ஒரு வரி எழுதிவிட்டிருந்தால் ஒன்றும் தவறு இருந்திருக்க முடியாது.

ஆகையால், தொழில் துறையிலே நீங்கள் காட்டிய அக்கறையை இந்த அரசு காட்டவில்லை என்ற மனமயக்கத்தைக் கொள்ள வேண்டாம். அந்தத் தொழில் துறையில் காட்டப்பட வேண்டிய அக்கறை காட்டப்பட்டுக் கொண்டுதான் வருகிறது!"

(தொடரும்)

நல்லெண்ணத்தை எதிர்பார்க்கிறேன்

கெடுமதி படைத்த அரசியல்வாதியல்ல நான்!

வில்லங்கமுடைய சொத்துக்குப் பொறுப்புணர்ந்த வாரிசாகியுள்ளோம்

சேலம்—தூத்துக்குடி பற்றி மத்திய அமைச்சர் முன்னிலையில் முதலமைச்சர் அண்ணா நிலைமை விளக்கம்

சென்னை, சூலை 4—

"மாநில அரசு பிரச்சினைகளை எழுப்பினால், அதனால் மோதல் ஏற்படத்தான் வேண்டுமென்ற அவசியமில்லை; வளர்ச்சியடைந்துவரும் நாட்டில் பிரச்சினைகள் எழத்தான் செய்யும். பல்வேறு மாநிலங்களுக்கும்—பகுதிகளுக்குமிடையில் போட்டிக் கோரிக்கைகள் எழத்தான் செய்யும். ஆகவே செய்யவேண்டியது என்னவென்றால், ஏதாவது ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டால் அதைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்.

"இத்தகைய பிரச்சினைகள்மீது நான் கூறியவை பற்றிச் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், நான் கூறியவை பற்றி வருத்தப்படவில்லை; இனியும் இம்மாதிரி பேசாமலிருந்துவிடப் போவதுமில்லை; அவை என் மனத்தின் ஆழத்திலிருந்து வந்தவை—ஒப்புக்காகப் பேசியவையல்ல; ஆனால் அறைகூவல் விடும் எண்ணம் எதுவுமில்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இந்துஸ்தான் வணிகக் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

வி. கே. ஆர். வி. ராவ்

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் குறிப்பிட்டதாவது:-

"தூத்துக்குடித் திட்டத்தைக் கைவிடுவதென முடிவு செய்யவில்லை என்று தமிழக மக்களுக்கு உறுதியளிக்கிறேன்.

"இந்தத் திட்டத்தைக் கட்டுப்படியானதாக்குவதற்கான வழிவகைகளைக் காணவே நாங்கள் முயன்றுகொண்டிருக்கிறோம். இதற்கு இந்தத் திட்டத்தை விரைவில் முடிப்பது என்பதும் பொருளாகும்.

"தூத்துக்குடித் திட்டம் பற்றி என்னுடைய அறிக்கைக்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்ததும், அடுத்த சில நாட்களில் நாடாளுமன்றத்தில் அதனை வெளியிடுவேன். அந்த அறிக்கை, வெறும் அனுதாபங்களும், நம்பிக்கைகளும் அடங்கியதாக மட்டுமிராது — எதிர்பார்த்தபடி மகிழ்ச்சி தருவதாக இல்லாவிட்டாலும் — அந்த அறிக்கையில் கொஞ்சம் மகிழ்ச்சிதரக்கூடிய அம்சம் இருக்கும்.

"முதலமைச்சருடன் நான் விரைவிலேயே, தூத்துக்குடித் துறைமுகப் பகுதிக்குச் செல்ல எண்ணியுள்ளேன்."

அண்ணா

மத்திய அமைச்சர் பேசிய பிறகு, பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"தூத்துக்குடி சம்பந்தமான கொள்கையை டாகடர் ராவ் நன்கு விளக்கினார்; ஆனால், அவர் என்ன செய்ய உத்தேசித்துள்ளார் என்பதைத் தெரிவிக்கவில்லை; எனினும், அவருடைய அறிக்கையில் நல்லெண்ணம் காணப்படுகிறது.

ஒரு யோசனையை ஏற்றுக்கொள்ளாததோ அல்லது ஓர் உறுதியை மீறுவதோ எளிது; ஆனால், நல்லெண்ணத்துடன் ஒரு யோசனையைப் பரிசீலிப்பது சிரமம். மறுக்கமுடியாத உண்மைகளையே நாங்கள் கூறுவதால் எங்களுடைய கோரிக்கை பற்றி உங்களைத் திருப்தி செய்ய முடியும்; தாமதங்கள் ஏற்படக் கூடும்; ஆனால் இந்த மாநிலத்தில் விரைவிலேயே தூத்துக்குடித் திட்டம் நிறைவேற்றப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

மத்திய அரசுடனோ அல்லது வேறு யாருடனோ மோத வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கில்லை. சச்சரவிடுவது எங்கள் இயல்பு அல்ல—நாட்டின் நலனுக்கும் அது உகந்ததல்ல!

இத்தகைய பிரச்சினைபற்றி சுமூகமாகக் கலந்து ஆலோசித்து, பணிந்து கொடுக்கும் அடிப்படையில் அல்லாது கண்ணியமான அடிப்படையில் சமரசத் தீர்வு காணமுடியும் என்று எதிர்பார்க்கிறேன்."

வில்லங்கமற்ற சொத்தல்ல!

"தமிழகத்திலுள்ள தி. மு. க. அரசு, தகுந்த நேரத்தில், ஒரு நல்ல சொத்துக்கு வாரிசாக வந்து நல்லபடி செயலாற்றி நடத்தி வருகிறது" என்று டாக்டர் ராவ் குறிப்பிட்டதுபற்றி அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"உண்மை என்னவென்றால், கணிசமான சொத்துக்கு தி. மு. கழகம் வாரிசாக வந்திருக்கிறது; ஆனால், அந்தச் சொத்து, 'வில்லங்கமற்றது' என்று சொல்லிவிட முடியாது.

"நாட்டுப் பொருளாதாரத்தின் வரலாற்றிலேயே மிக மோசமான தருணத்தில்தான் இந்தச் சொத்துக்கு வாரிசாக வந்திருக்கிறோம். சொத்து கணிசமானதாயிருப்பதால், அது குலைந்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு பொறுப்புணர்ச்சி அமைச்சரவைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சொத்து நிலையற்றதாகவோ, அல்லது ஒரு பின்தங்கிய மாநிலத்தில் உள்ளதாகவோ இருந்தால், ஒருவேளை சுலபமாயிருந்திருக்கலாம்.

இதன் மதிப்புக் குறையாமல் காப்பாற்றி வரவேண்டியிருக்கிறது.

இந்தச் சொத்தை வைத்துப் பாதுகாப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லாத நிலைமையில் இதன் வாரிசுரிமை எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

ஒரு மக்களாட்சி அமைப்பில் நல்லபடி நிர்வாகம் நடத்துவது செலவு மிகுந்த வேலையாகும். சமுதாயத்தின் பொதுக் கருவூலத்திலிருந்து அதற்கு நிதி வசதி கிடைத்தாக வேண்டும். மத்திய அரசிடமிருந்து முழுஅளவில் நல்லெண்ணம் கிடைப்பது அவசியமாகும்.

தூத்துக்குடித் திட்டமும், சேலம் திட்டமும் பொருளாதார அடிப்படையில் அவசியமான திட்டங்களாகும். குறுகிய வட்டாரக் கோரிக்கைகள் அல்ல.

சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தமிழகத்துக்கு மட்டும் பயனளிக்கும் திட்டமாகக் கருதாமல், நாடு முழுமைக்கும் நடுநாயகமான சீரிய திட்டமாக மத்திய அரசு கருதவேண்டும்.

(3-ம் பக்கம் பார்க்க)

தீ விபத்துப் பிரச்சினை

விரிவான கொள்கை அவசியம்

திட்டம் பற்றி அண்ணு அறிவிப்பார்

சென்னை, ஜூலை 5—

இன்று மாலை அண்ணு அவர்கள் தீ விபத்து நடந்த இடங்களுக்குச் சென்று பார்வை யிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல கூறினார்கள்.

அவர் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் திரண்டுவந்து தங்கள் துயரத்தைக் கூறிய தால், மற்ற இடங்களுக்கும் செல்ல இயலவில்லே.

'நீல நிறத்துடன் எரிந்தது'

"தீ விபத்தினுல் பாதிக்கப் பட்ட மக்களை, விபத்து பற்றிக் கூறுகையில், தீ பிடிக்கத் தொடங்கியதும் நீல நிறத்துடன் எரிந்ததாகக் கூறினார்கள். இப் படி எரிவதற்கான காரணம், சாணத்தில் பாஸ்பரசை வைத்து, குடிசைமீது எறிந்திருப் பதால் ஏற்பட்டிருக்கக்கூடும்" என்று அண்ணு அவர்கள் கூறினார்கள்.

அவசர ஆலோசனை

இன்று மாலை முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், பொதுப்பணித் துறை அமைச்சர் டி. கருணுநிதி — சட்ட அமைச்சர் கே. மாதவன்— மாலே வீட்டு வசதிக் வழகத் தலேவர் — பொதுப் பணித் துறைச் செயலர் ஆகியோருடன், தலேமைச் செயலகத்தில் இத்தீவிபத்து நிலேகுறித்து பற்றிக் கலந்தாலோசித்தார்கள்.

தலேமையமைச்சருக்கு மடல்

தலேமையமைச்சரின் நிவாரணு நிதியிலிருந்து, இவ்விபத் துக்களால் பாதிக்கப்பட்டிருக் கும் மக்களுக்கு, உதவியளிக்கு மாறு, சட்ட அமைச்சர் மாதவன் மூலம், முதலமைச்சர் அண்ணு அவர்கள், தலேமையமைச்சருக் குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

"நான் ஒரு திட்டம் வைத் திருக்கிறேன்; இப்பிரச்சினேப் பற்றி நமக்கு ஒரு விரிவான கொள்கை இருக்கவேண்டும்; இதைப்பற்றி நான் இன்னும் இரண்டு நாட்களில் அறிவிப் பேன்" என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் கூறினர்கள்.

ஐ. ஜி.-க்கு உத்தரவு

குடிசைப் பகுதிகளில் இருக் கும் மக்கள் தீவிபத்தினுல் இருப்பதற்காக, காவல்துறை யினர், குடிசைப் பகுதிகளேக் கண்காணிக்க வேண்டுமென போலீசு ஐ. ஜி. அவர்களிடம் முதலமைச்சர் கூறியிருக்கிறர்.

உணவுத் துறை அணுயருக்கு முதலமைச்சர் உத்தரவு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்காக, மாநக ராட்சி ஆணயரிடம் தேலேயான அதிக அளவு அரிசி வழங்க உணவுத்துறை ஆணயரிடம், முதலமைச்சர் அண்ணு அவர்கள் கூறியுள்ளார்கள்.

அண்ணு நன்றி

இராமகிருஷ்ணு மிஷன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்ததற்காக அறிஞர் அண்ணு அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மாநகராட்சி உதவி

தீ விபத்துக்களால் வீடிழந்த வர்களுக்கு தங்குவதற்கு வசதி யும், உணவும் அளிப்பதற்குத் தேலேயான ஏடவடிக்கைகளே மாநகராட்சி ஆணயர் மேற் கொண்டிருக்கிறர்.

விலைவாசி ஏற்றத்தால்

வழக்குகள் அதிகரித்தன

சட்டமன்றத்தில் அண்ணு தந்த தகவல்

சென்னை, ஜூலை 5—

குற்றம்—சிறப்புச் சட்டங்களின் கீழும், உள்ளூர் சட்டங்களின் கீழும் இந்தியத் தண்டனேச் சட்டத் தொகுப்பில் தொல்லே உண் டாக்குவது பற்றிய பிரிவுகளின் கீழும் நிகழ்ந்த சிறு குற்றங்கள் நீங்கலாக, 1966-ம் ஆண்டில் நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட வழச்குகள் 56,336 ஆகும்; இந்த வழக்குகள், 1965-ம் ஆண் டில் 49,151 ஆக மட்டுமே இருந் தன.

வழக்குகளத் தாமதமாகப் பதிவு செயதமையும், சீர்கேடான பருவ நிலேமையும், விலேவாசி ஏற்றமும்தான் வழக்குகள் அதி கரிப்பதற்குக் காரணங்களாக கும்.

1966-ம் ஆண்டில் தப்புத்தலேக் கப்பட்ட நீதிமுறைக்குற்றங்கள் 61.1 சதவிகிதமாகும். இந்த எண்ணிக்கை 1965-ல் 56.1 சதவிகிதமாக மட்டுமே இருந் தது.

குற்றங்கள் தப்புத்தலேக்கப்படுவ தில் உள்ள இந்த முன்னேற்றம் கடந்த 11 ஆண்டுகளாகவே ஏடித்து வருகிறது.

இத்தகவலே முதலமைச்சர் அண்ணு சட்டமன்றத்தில் தந்தார்.

சமுதாய நல வளர்ச்சித் துறைச் சீரமைப்பு

எல்லாக் கட்சித் தலேவர்களேயும் கலந்தாலோசிக்கத் திட்டம்

சென்னை, ஜூலை 4—

"தமிழ்நாட்டில் உள்ள சமுதாய நல வளர்ச்சித் துறையைச் சீரமைக்கவேண்டிய ஏற்பாடுகள் அரசின் பரிசீலனேயில் இருக் கிறது; சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களின் செயல்முறைகளே ஆராயுமாறு மத்தியப் பிரதேசத் துக்கு அனுப்பப்பட்ட தமிழக முதலமைச்சரின் தனி அதிகாரி தமது அறிக்கைகளக் கொடுத் திருக்கிறர்; அதுவும் பரிசீலனே யில் உள்ளது; முதலமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சித் தலே வர்களேயும் கூட்டி இதினப் பரிசீலனேக்குவைத்து விவாதிக்க விருப்பம் தெரிவித்திருக்கிறர் கள்"

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி, சட்டமன்றத்தில், கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இந்த கேரத்தில் அண்ணு குறுக் கிட்டுக் கூறியதாவது:—

"சில நிமிடங்களுக்கு முன்புகூட இதுபற்றித்தான எதிர்க் கட்சித் தலேவரிடம் பேசிக்கொண்டிருந் தேன். இந்தக் கட்டத் தொட ரின் இறுதியில் எல்லா கட்சித் தலேவர்களேயும் அழைத்து விவா திக்கலாம் என்றிருக்கிறேன்."

சத்தியவாணிமுத்து ஆலோசனை

சத்தியவாணிமுத்து, மகளிர் நலச் சங்கத்தாருடனும், செஞ் சிலுவைச் சங்கத்திலிருந்து பால் பவுடரும், மற்றும் தேவையான பொருட்களும், தீ விபத்துக் களால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவதற்காகக் கலந்தாலோ சித்தார்.

சென்னை--குமரி நெடுஞ்சாலே

480 மைல் தொலேவு--ரூ. 14 கோடி செலவில் அமையும்

சென்னை, ஜூலை 5—

"சென்னை—கன்னியாகுமரி இடையே தேசிய நெடுஞ் சாலே அமைக்கும் பணிக்கு மொத்தம் ரூ. 14 கோடி செல வாகும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது. தற்போது மகாபலி புரத்திலிருந்து தென்னுற்காடு மாவட்ட எல்லேவரை 25 மைல் தொலேவுக்குச் சாலே அமைக்க மத்திய அரசு ரூ. 14 இலட்சம் அளித்துள்ளது"

என்று பொதுப்பணித் துறை யமைச்சர் திரு. மு. கருணுநிதி, சட்டமன்றத்தில் அறிவித்தார்.

துணக் கேள்விகளுக்குப் பதில ளிக்கையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"இத்திட்டத்தின் விரிவான பயன் குறித்து மத்திய போக்கு வரத்து ஆராய்ச்சி கவுன்சிலின் அறிக்கையை இந்திய அரசு பரி சீலித்த பிறகு, மாநில அரசையும் ஆராயும்படி கேட்டுக்கொண்டது. அதன்பேரில் பயன் விகிதாசாரம் பற்றி மறு ஆய்வு செய்து, 25 மைல் தொலேவு சாலே அமைக்க ரூ. 82 இலட்சம் அலுமதிக்கப் பட்டு வேலே துவங்கியுள்ளது.

இந்தச் சாலே முழுமைக்கும் மொத்தம் ரூ. 14 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முத லில் ரூ. 14 இலட்சம் மத்திய அரசு வழங்கியுள்ளது.

சென்னை — புதுவை — கடலூர் —நாகை—தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களே இணக்கும்வகை யில் இந்தச் சாலே அமையும்.

மீன் பிடித்தல், உப்பளத் தொழில், எரிமரம், கயறு திரித்தல் போன்ற தொழில் துறை வளர்ச் சிக்கு இது மிகவும் பயன்படும்; வேளாண்மைத் துறை வளர்ச்சிக் கும் பயன்படும.

ஆண்டுதோறும் ரூ. 4 கோடி வரை வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றம் திட்டத்திலேயே இத் திட்டத்தைச் சேர்க்கப் பரிந்துரை செய்யப்பட்டது; அதன் மத்திய அரசு ஆராய்ந்து, மீண்டும் மாநில அரசை ஆராயுமாறு கூறினர். அதன் பிறகு, 'ரூ. 14 கோடி செல வாகும்' என்று மதிப்பிட்டு நான காம் திட்டத்தில் சேர்க்க பரிந் துரை செய்யப்பட்டுள்ளது. நான் காம் திட்டம் இறுதியாக முடிவு செய்யப்படும்போது இது பற்றியும் யோசிக்கப்படும்' என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

25 மைலுக்கு மட்டும் செலவிலு பாதியை மாநில அரசு ஏற்கும். மொத்தக் செலவான ரூ. 14 கோடி யில் பாம்புகெடியை மத்திய அரசு ஏற்கும்.

இந்தச் சாலேயின் மொத்த நீளம் 480 மைல். இதில் புதிதாகப் போடவேண்டிய சாலேகளின் நீளம் 80 மைல்; சீர்திருத்தப்படவேண் டிய சாலே 450 மைல்."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல், தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுகத் திட்டமும் இந்தியா முழுவதற்கும் பலன ளிக்கும்.

தமிழ்நாட்டுத் திட்டங்கள் குறித்து நாங்கள் வற்புறுத்தும்போது, 'குறுகிய மாகிலப் பிரதமுபிடித்த வர்கள்' என்று சொல்லப்படுகி றது. ஏதும்செய்ய இயலாத நிலே யில் உள்ளவர்கள் சிக்கலேத் தட்டிக் கழிக்கக் கூறும் பேச்சே அது.

நெடுமுதிகொண்ட அரசியல்வாதி யாக இருந்தால் இப்படிச் சுட் டிக்காட்டி இடித்துரையாமல் சும்மா இருந்துவிட்டு, கடைசி யில் மக்களுன் சென்று, 'மத் திய அரசு எதையும் செய்ய வில்லேயே பார்த்தீர்களா' என்று சொல்லலாம் அல்லவா? அத் தகைய நெருமதி அரசியல்வாதி யல்ல நான்!

எனவேதான், சிரமம் நிறைந்த அரசியல் வழியைத் தேர்ந் தெடுத்து இந்தப் பிரச்சினேகளே யெல்லாம் இப்பொழுதே எழுப்பு கிறேன்."

சென்னையில் மேலும் புதிய தியணப்பு நிலேயங்கள்

முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 5—

"இம்மாநிலத்தில் இப்போது 55 தியணப்பு நிலேயங்கள் உள் ளன; அவற்றில் 12 சென்னை மாநகரிலும், 43 வெளி நகரங் களிலும் உள்ளன.

"1967—68-ல் திண்டிவனத்தில் தியணப்பு நிலேயம் ஒன்று ஏற படுத்தப்படும்.

"சென்னை நகரத்தில் மேலும் மூன்று நிலேயங்கள் ஏற்படுத்து வதற்கு ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற் றிற்குத் வேண்டிய வசதி கிடைத் தவுடன் இவை ஏற்படுத்தப் படும்"

என்று, முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்றத்தில், காவல்துறை மானியக் கோரிக் கையையொட்டி அளித்த அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் கூறப்பட்டுள்ள தாவது:—

"நகரங்களிலே ஏற்பட்ட தொழில் தீவிபத்து—விட்டுத் தீ விபத்து—ஏனய தீவிபத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தீயணப்புப் படை நிலேயங்கள் வருங்காலத்தில் எந்தெந்த நகரங் களில் நிறுவப்பட வேண்டும் என் பதற்கு இந்த அரசு முறை வைப் புப் பட்டியல் ஒன்றை தயாரித் துள்ளது. இந்தப் பட்டியலின்படி இன்னும், 29 நகரங்களில் தீ யணப்பு நிலேயங்களே நிறுவ வேண்டும்."

தீயணப்புப் படையின் சென்ற ஆண்டுப் பணி

1966-ம் ஆண்டில் 3,787 தடவைகள் தீயணப்புப் படை அழைக்கப் பட்டது.

தீவிபத்து ஏற்பட்ட 3293 நிகழ்வு களில் 39 தீவிபத்துக்கள் கடுமை யானவை; இவற்றில் ஒவ்வொன் றிலும் உயிரிழப்பும், 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட உடமை இழப்பும் ஏற்பட்டன.

தீவிபத்து அழிவிலிருந்து தேசராயமாக ரூ. 247.3 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் காக்கப் பட்டன.

குடிசீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் மக்களுக்கு நீர் வழங் கித் தீணை செய்வதற்காகத் தீ யணப்பு படையின் வண்டிகள் அனுப்பப்பட்டன. இவ்வாண்டில் 434 அவய அழைப்புக்களுக்கு ஊனங்கள் சென்று பணியாற்றி யுள்ளனர்.

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தீவிபத்தைத் தடுப்ப தில் பொறுப்பீன உணர்த்தும் பொருட்டும், தீவிபத்து ஏற்பட் தொடக்க நிலேயில் அந்த இடத் திற்குத் தீயணப்புப் படை வரும் வரை தீயை அணக்கும் வகையை அவர்களுக்கு விளக்கவும், கிராமங் களில் தீவிபத்துக்களால் ஏற்படும் தீமைகளிக் குறைக்கவும், கிராமத் தீவிபத்துக் கண்காணிப்பு—தீய ணப்புப் படை ஒன்று உள்ளூர்!) போலீசு அதிகாரிகளின் உதவி யுடன் அமைக்கப்பட்டுள்ளது. 148 தடவைகளில் இந்தப் படை உதவியாயிருந்தது.

சு. 6.75 கோடி நட்டமேன்?

போபால், ஜூலை 5—

1965—66ம் ஆண்டில் போபால் கனரக மின்சார நுன உற்பத் தித் தொழிற்சாலேக்கு ரூ. 6.75 கோடி நட்டம் ஏற்பட் டிருக்கிறது. இந்த ஆண் டில் வேறு எந்த அரசாங்க நிறுவனமும், இந்த அளவுக்கு நட்டமடையவில்லே.

"டிரான்ஸ்பார்மர், கம்பாசிட் டர் ஆகியவற்றின் விநியோ விலே, உற்பத்தி விலேயைவிடக் குறை வாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது" என்று தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பஞ்சப் படி!

சென்னை, ஜூலை 5—

அரசு ஊழியர்களுக்கு பஞ்சப் படி உயர்த்துவது பற்றிய கேள்வி கள் சட்டமன்றத்தில் எழுந்த போது, சுதந்தராக் கட்சி உறுப் பினர் திரு. டி. எஸ். ஆதிமூலம் எழுந்து,

"அரசாங்க ஊழியர்கட்குப் பஞ்சப்படியை உயர்த்துவது பற்றியே பேசிக்கொண்டிருக்கி றீர்கள். இங்கச் சட்டமன்ற உறுப்பினர் கட்கும் பஞ்சப்படியில் ஏதாவது உயர்த்தப்படுமா?" என்று கேட்டார்.

அதற்கு முதலமைச்சர் அண்ணு பதிலளிக்கையில்,

"பஞ்சம் ஏற்பட்டிருப்பதற் குக் காரணமே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகமாகப் படி கொடுக்கப்படுவதனுல் தான்' என்று வெளியிலே உள் ளவர்கள் பேசிக்கொள்கிறார் கள்" என்று கூறினர்.

ஊர்க்காவல் படை

எண்ணிக்கை உயராது!

சென்னை, ஜூலை 5—

"ஊர்க்காவல் படையில் 1966-ம் ஆண்டிசம்பர் 31-ம் நாளன்று 11,803 பேர் இருந்தனர். அப் படையினரின் எண்ணிக்கை யைப் பெருக்குவதில் பையச் செல்லும் ஒரு பாங்கினேப் பின் பற்றுவதென அரசு முடிவு செய் துள்ளது.

"இப்படையின் தரமே கோட் பாடாகக் கொள்ளப்படுமே யன்றி, அதன் எண்ணிக்கை முக்கியமல்ல; எனவே, ஊர்க் காவல் படையின் எண்ணிக் கையை இப்போதைய நிலேயில் உயர்த்த வேண்டியது இல்லே யென இம்மாலே அரசு கருது வதாக இந்திய அரசுக்குத் தெரி வித்தவும் இம்மாலே அரசு நிர்ணக்கிறது"

என்று அண்ணு அவர்கள் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்கள்.

"பெரும்பாலும் எல்லா மாவட் டங்களிலும் ஊர்க்காவல் படை யினருக்குப் பணிப் பயிற்சி அளிப்பது முடிவடைந்துள்ளது.

"ஊர்க்காவல்படையைச் சேர்ந்த 51 அதிகாரிகள் காசுபரியில் உள்ள நெருக்கடிக் கால, துயர் தணிப்புப் பயிற்சி மத்திய நிறு வனத்தில் இதுவரை: மேல் பயிற்சி பெற்றுள்ளனர்."

தமிழக அமைச்சர்கள் புதுடில்லி பயணம்

சென்னை, ஜூலை 5—

தமிழகத் தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இன்று புது டில்லிக்குப் புறப்பட்டார்.

நூல் மீதுள்ள கலால் வரியைக் குறைக்கும் பிரச்சினே குறித்து மத் திய அரசுடன் விவாதிக்கப் போவ தாக அவர் செய்தியாளரிடம் கூறி னர்.

உணவு அமைச்சர் கே. ஏ. மதி யழகன், தமிழக உணவுப்பிரச்சினே குறித்து மத்திய அரசுடன் விவா திப்பதற்காகென டில்லி சென்றுள் ளார்.

மறுப்பு

"கடந்த 29—6—67-ந் தேதி யிட்ட 'கவசக்கி' இதழில், மதுரை நிலக்கோட்டை பழைய வத்தில் குண்டு 6,7-வது வார்டு மகரசன் 15-வருடங்களாக தி. மு. க.-வில் இருந்து இப்போது கட்சி விலகி காங்கிரசில் சேர்ந்துள்ளார்" என்ற செய்தி தவருனது.

"மேற்படி வார்டு 6,7-வது வார்டு லிருந்து கழகத்தின்உறுப்பினராகப் பதிவுபெறவும் இல்லே—கழகத்தின் அதரவாளராகவும் இல்லே. என்று பழைய வத்தலக்குண்டு தி. மு. க. செயலாளர் அ. கூட ராசன் அறிவிக்கிறர்.

'சனநாயகம் தலைதூக்கும்' என்ற எண்ணம் அதிகாரத் துறையினருக்கு ஏற்படவில்லை'

'ஒரே கட்சி ஆட்சி முறைக்குத் தகுந்தாற்போல் நடந்துகொண்டனர்'

'நிலைமை மாறிவிட்டது என்பதை உணர்ந்துகொண்டனர்' -- சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, சூலை 5—

"இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒரே கட்சி ஆட்சியில் இருந்ததால், 'சனநாயகம் இந்த நாட்டில் தலைதூக்கும்' என்ற எண்ணம் போலீசாருக்கோ அல்லது மற்ற அதிகாரத்துறையினருக்கோ ஏற்படவில்லை; 'திரும்பத் திரும்ப ஒரே கட்சிதான் ஆட்சிக்கு வரும்' என்று எண்ணி, அதற்குத் தகுந்தபடி நடக்க முற்பட்டார்கள்; இப்பொழுதுதான், 'வேறொரு கட்சி அரசாள முடியும்' என்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது!

"இப்படி, 'வேறு வேறு கட்சிகள் வரும்' என்ற நிலைமை ஏற்பட்டிருந்தால், எந்த அதிகாரத் துறையையும் எந்தக் கட்சிகளும், தங்கள் பக்கத்தில் இழுத்துக்கொள்ளமுடியும் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு வந்திருக்காது"

என்று சட்டமன்றத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'அதிகாரிகள் ஒரு கட்சி சார்பாக நடந்துகொள்கிறார்கள்' என்று கூறப்பட்ட புகாருக்குப் பதிலளிக்கையில் விளக்கினார்.

போலீசுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது:—

"சமுதாயத்தில் உள்ள பண்புகள் தான் போலீசுத்துறை உட்பட எல்லாத் துறைகளிலும் பிரதிபலிக்கின்றன.

சமுதாயத்தில் நேர்த்தி வளர வளர போலீசுத் துறையில் உள்ள குறைபாடுகளும் குறையும்.

போலீசாரும்—பொதுமக்களும் நெருங்கி வந்துகொண்டிருக்கிறார்கள். இது வளம் பெற்றால் இதனால் நாளடைவில் மாறுதல் ஏற்படும்."

தேனி விவகாரம்

"காங்கிரசுக் கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியாய் இல்லாததால் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவதாக இங்கு புகார் கூறினார்கள்.

தேனியில் காங்கிரசுக்காரர்களின் கைகளில் விலங்கு போட்டுப் போலீசார் அழைத்துச் சென்றதாகக் கூறப்பட்டது.

இதைக் கேட்டு நான் பதறவில்லை; அதற்குக் காரணம், இது எங்கள் கழகத்திற்கு நீண்ட நாட்களாகக் கிடைத்த அனுபவமாகும்.

ஆனால் இருபது வருடங்களாகத் தர்பாரில் இருந்துவிட்ட காங்கிரசுக்காரர்களுக்குக் கைவிலங்கு போட்டால் வருத்தமாய்த்தான் இருக்கும்....."

பி. ஜி. கருத்திருமன்:—"நாங்களும் கைவிலங்குப் பூட்டப்பட்டு வீதியில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறோம். ஒரு சட்டமன்ற உறுப்பினர் போலீசு நிலையம் சென்று சொல்லியதின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத்தான் சொன்னேன்."

அண்ணா:—"அப்படியானால், பிரச்சினையின் முற்பகுதி கைவிடப்பட்டது."

தொடர்ந்து அண்ணா அவர்கள் இச்சம்பவம் பற்றி மேலும் விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"தேனியில் காங்கிரசுக்காரர்கள் இப்படி நடத்தப்படலாமா? அதற்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் போலீசாரைப் பயன்படுத்தி 'அப்படிச் செய்-இப்படிச் செய்' என்று சொல்லலாமா" என்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்கிறார்.

எங்கள் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் இப்படி நடந்துகொண்டதாக மெய்ப்பிக்கப்படுமானால், கட்சி அடிப்படையில் அவர்மீது எந்த நடவடிக்கை எடுப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை அந்த இடத்திற்கு அனுப்பி விசாரணை நடத்தச் செய்வோம்; 'காங்கிரசுக்காரர்கள் கைவிலங்கு பூட்டப்பட்டு அழைத்து வரப்பட்டார்' என்று நடுநிலைமையாளர் ஒருவர் அறிவித்தால் அப்படிச் செய்த போலீசு அதிகாரியின் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறுகிறேன். 'அப்படிச் செய்யவில்லை' என்று நிரூபிக்கப்பட்டால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

கருத்திருமன்:—"அந்தப் பேச்சை விட்டுவிடுவோம்"

அண்ணா:—"எதிர்க் கட்சித் தலைவர் இப்படி சொல்வதுசரிதானா? இது ஒரு பொறுப்புள்ள எதிர்க் கட்சியின் சுபாவமாக வளரக் கூடாது. அப்படிப்பட்ட சம்பவம் நடைபெறவில்லை என்று எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அவருக்கோ வேறுவிதமான தகவல் கிடைத்திருக்கிறது. ஆகையால் நடுநிலையாளரைக்கொண்டு விசாரணை நடத்த தயாராக இருக்கிறேன்."

தகராறுகள் உருவாகும் விதம்

தென்னாற்காடு மாவட்டத்தில் சில இடங்களில் வகுப்புக் கலவரங்கள் நடப்பதாகச் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபற்றி முதலமைச்சர் கூறியதாவது:—

"இந்தக் கலவரங்கள் வகுப்பு அடிப்படையில் நடந்திருந்தால் அதை விரிவுபடுத்தி பேசுவதன் மூலம் மீண்டும் கலவரம் உண்டாக்கும் நிலையை உருவாக்க வேண்டாம். நல்லவேளையாக நம் நாட்டில், 'ஒரு அரசியல் கட்சிக்கு ஒரு வகுப்பு சொந்தம்' என்ற நிலைமை இல்லை. எல்லா அரசியல் கட்சிகளிலும் எல்லா வகுப்பினரும் இருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் வளர வளர வகுப்புக் கலவரங்கள் குறையும் என்பது என்னுடைய நம்பிக்கை.

கூடுமான வரையில் வகுப்பு உணர்ச்சி அடங்குவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் வகுப்புக் கலவரங்களைப்பற்றி விசாரித்தபோது அவை மிகச் சாதாரண எளிய நிலையில் உள்ளவர்களிடையே வருகிற தகராறுகளின் அடிப்படையிலேயே இருக்கின்றன. இவைகளை வகுப்புக் கலவரங்களாக்கினால், தொல்லைகளை உண்டாக்குவதாகும். ஆகவே இப்படிப்பட்ட பேச்சுகளை கூடுமான வரை குறைத்துக்கொள்ள வேண்டும்."

சமூக விரோதிகள் மூட்டிவிடும் மோதல்!

சேலம் — அம்மாப்பேட்டையில் கலவரம் நடப்பதாகக் கூறப்பட்ட புகார்கள் பற்றி முதலமைச்சர் கூறியதாவது:—

"சேலம் — அம்மாபேட்டையில் நடக்கும் கலவரங்களில் ஒரு பக்கத்தில் காங்கிரசு — மற்றொரு பக்கத்தில் கழகம் என்றாலும், ஒரு பக்கத்தில் மாமன்—மற்றொரு பக்கத்தில் மைத்துனர்—ஒரு பக்கத்தில் ஒரு கடையின் முதல் பங்காளி—இன்னொரு பக்கத்தில் மற்றொரு பங்காளி என்ற அளவில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அம்மாப்பேட்டை, நூலுக்குப் பேர்பெற்ற இடம்; சிக்கலுக்குப் பேர்பெற்றது நூல்; சிக்கல் உள்ள இடத்தில் கலவரம் நடந்தால் தானாகத் தீர்ந்துவிடும் என்று வேடிக்கை பார்க்க வேண்டுமே தவிர, கட்சிகளோடு இணைக்கக்கூடாது.

பெரும்பாலான கலவரங்கள் கட்சி அடிப்படையில் ஆரம்பமானவை அல்ல; அரசியல் வாதிகளாகிய நாம்தான் அவைகளில் கட்சியை இணைத்து ஏமாந்துவிடுகிறோம்.

கலவரங்களை நடத்துகின்ற சமூக விரோதிகள், நமக்குள்ளே மோதலை மூட்டிவிடுகின்ற முறையில்தான் நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆகவே, எதிர்க் கட்சித் தலைவர் அங்கு சென்று நேரடியாக விசாரித்து முழுத் தகவல்களையும் தந்தால் 24 மணி நேரத்தில் அதற்குரிய நியாயமான பரிகாரத்தைத் தேட நான் தயாராக இருக்கிறேன்."

மிரட்டலுக்கு உயிரூட்டம் ஏன்?

காங்கிரசு உறுப்பினர் ஒருவர், 'தி. மு. கழகத்தினர் 'மிரட்டுகிறார்கள்' என்றும், 'மிரட்டல் கடிதங்கள் வருகின்றன' என்றும் கூறியது பற்றி முதலமைச்சர், தமது சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தைக் காட்டிக் குறிப்பிட்டதாவது:—

"இது நேற்று வந்த கடிதம். கருணாநிதிக்கு எழுதப்பட்டிருக்கிறது. எழுதியவர் கழகத் தோழர் அல்லர் என்பதற்கு அடையாளம்—அந்த கடிதத்தின் முகவரியில்—'மு. கருணாநிதி, பி. டபிள்யூ. டி. மினிஸ்டர், கோபாலபுரம், சென்னை' என்றுதான் இருக்கிறது.

கழகத் தோழராக இருந்தால், 'அமைச்சர் கருணாநிதி' என்றோ, 'கலைஞர் கருணாநிதி' என்றோ தான் குறிப்பிட்டிருப்பார்!

"அந்தக் கடிதத்தில், "தயார் செய்து கொள்ளும் தலையை! பொதுப்பணி அமைச்சரும் தி. மு. க. தலைவர்களில் ஒருவருமான நீர், 24—7—67 அன்று சுட்டுக் கொல்லப்படுவீர்! தமிழ் நாட்டில் எங்கிருந்தாலும் இது நடந்தே தீரும்! இது உறுதி!" என்று எழுதப்பட்டிருக்கிறது.

கே. வினாயகம்:—"கையெழுத்து இருக்கிறதா?"

முதலமைச்சர்:—"வழக்கறிஞரான நண்பருக்குத் தெரியும்—இந்த மாதிரி அனாமத்துக் கடிதங்களில் கையெழுத்து போடமாட்டார்கள் என்பது. அப்படிக் கையெழுத்தே போட்டிருந்தாலும் அதைப்பற்றிக் கவலை கொள்ளமாட்டேன்.

எங்களில் யாருக்காவது அப்படியொரு முடிவு ஏற்படுமானால் அதைவிட இன்பமான முடிவு, எங்களில் வேறு யாருக்கும் இருக்கமுடியாது!

ஆகவே, புகார்க் கடிதங்கள்—மிரட்டல் கடிதங்கள் காட்டப்படவேண்டுமானால், எங்களிடம் டன் டன்னாக இருக்கிறது.

முன்பெல்லாம நாங்கள் எந்த ஊருக்குச் சென்றாலும் இதைப் போன்ற மிரட்டல் கடிதங்கள் வந்துகொண்டுதானிருக்கும்!

ஆகவே, கடிதங்களைக் காட்டுவதால் பயனில்லை; நிகழ்ச்சி நடந்த இடத்திற்கே சென்று விசாரித்துத் தகவல் தரட்டும்—தகுந்த பரிகாரம் தேடத் தயாராக இருக்கிறேன்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--7--67

கோவை

7-வது வட்டம் எஸ்.எஸ்.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தண்டுமாரியம்மன் கோயில் சந்தில்; தலைவர்: ஏ. ஆர். இராமச்சந்திரன்; பேசுவோர்: செ. மாதா கவுடர், ப. கோபால், கேரள சுந்தரம், க. மருதாசலம், மற்றும் பலர்.

சென்னை 60-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு இராயப்பேட்டை சீனிவாசபுரம் 2-வது தெருவில்; தலைவர்: ஆர். எம். வீரப்பன்; பேசுவோர்: அறிஞர் அண்ணா, அமைச்சர் கே. ஏ. மதியழகன், நீலநாராயண, பாண்டியன்.

9--7--67

குளித்தலை

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: குளித்தலை முத்துக்கிருஷ்ணன்; பேசுவோர்: கோவை மு. இராமநாதன், மீ. சு. இளமுருகுபொற்செல்வி, எம். கந்தசாமி எம்.எல்.ஏ., பெ. சௌந்திரபாண்டியன், கு. வீ. முத்துசாமி, சு. பெரியசாமி, ஆ. பெ. கிருஷ்ணன், கே. வி. சிவராஜ்.

சேலம்

20, 23-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அம்மாபேட்டை செல்வம் சதுக்கத்தில்; தலைவர்: கே. எஸ். மணி; பேசுவோர்: துரைமுருகன் பி.ஏ., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., எஸ். ஏ. அன்புக்கரசு, ஏ. மாரியப்பன் எம்.சி., கே. செயராமன் பி.ஏ., எம்.எல்.ஏ., கே. ஏ. பழனிச்சாமி பி.ஏ.பி.எல்., ஆர். எஸ். மணி எம்.ஏ.பி.டி.,பி.எல்.

இருகூர்

எஸ். எஸ். ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; பேசுவோர்: செ. மாதா கௌடர், உ. கி. ந. இராசு, க. மருதாசலம், செ. கு. பழனிச்சாமி, கேரளசுந்தரம்

தாயில்பட்டி

அண்ணா படிப்பகச் சார்பில் இரவு 7-மணிக்கு ஊராட்சி மன்றத்திற்கு எதிரில்; தலைவர்: அ. கொ. கிருட்டிணசாமி; பேசுவோர்: கோ. வரதராசன், இரா. கருப்பசாமி, ஏ. துரைக்கண்ணன், மற்றும் பலர்.

குழுக் கூட்டம்

"அரக்கோணம் 13-வது வட்டம் சோமசுந்தர் முதலித் தெருவில் உள்ள சீர்திருத்தச் சங்கத்தில் அரக்கோணம் வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் ஜி. எல்லப்பன் அறிவிக்கிறார்.

பள்ளி நிர்வாகிகள் மாநாடு

அரசினர் உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகள் சங்க ஆறாவது மாநாடு 8—7—67 மாலை 4-30 மணிக்கு திருவல்லிக்கேணி தேசீய உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்; அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மாநாட்டைத் திறந்துவைப்பார்; திரு. கே. பாலசுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

மின் கழகப் பொறியர்கள் சங்க ஆண்டு விழா

சென்னை மின் கழகப் பொறியர்கள் சங்க 10-வது ஆண்டு விழா, 8—7—67 மாலை 5-மணிக்கு மவுண்ட்ரோடு, 157-எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறும்; அது போது முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

MADRAS STATE ELECTRICITY BOARD
(GENERATION CIRCLE)
Madras Electricity System,
Basin Bridge Power House,
Madras-12

SEALED TENDERS with specification No. and due date superscribed on the envelope are invited upto 3-00 P.M. on the due date mentioned below and will be opened at 3-30 P.M. on the same date in presence of such of the tenders who prefer to be present.

1. Specification No. SEG/BB No. 5/1967—68.
2. Material to be supplied: River sand.
3. Due date: 20—7—67.
4. Earnest Money Deposit: Rs. 250/-
5. Cost of tender documents: Rs. 5.13 (not refundable).

Copy of tender forms can be obtained on payment of Rs. 5.13 either in cash or by Money order only to the Deputy Chief Accountant/Generation, M.E.S. Basin Bridge Power House, Madras-12. The Money order coupon should bear the details of specification No due date and full address of the tenderer. The Electricity Board is not responsible for any loss/delay in transit of the tender sets sent by post. Tenders received late and those not submitted in the prescribed form will be summarily rejected. Tender forms are not transferable.

SUPERINTENDING ENGINEER
(GENERATION)
Madras Electricity System
Basin Bridge Power House,
Madras-12

MADRAS STATE ELECTRICITY BOARD

RE-AUCTION NOTICE

One number condemned Chevrolet Lorry 1945 Model bearing registration number MDN 4269, will be sold in Public Re-auction at the Transport Overseer Yard, Mettupalayam near Railway siding on 19—7—67 at 12 Noon. The vehicle may be inspected at the above place on any working day during office hours.

The condition of auction sale and details of the Lorry can be had free of cost on requisition from the Office of the Superintending Engineer, Parsons Valley Circle, Emerald Camp Post, The Nilgiris.

SUPERINTENDING ENGINEER,
Parsons Valley Circle
EMERALD CAMP

காஞ்சியில் பட்டு நெசவு பாதுகாப்பு மாநாடு

முதலமைச்சர் அண்ணா கலந்துகொள்கிறார்

தமிழ்நாடு பட்டு நெசவுத் தொழில் பாதுகாப்பு மாநாடு 9—7—67 மாலை 7-மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி பாலர் அரங்கில் நடைபெறும்; வரவேற்பாளர்: கே. எஸ். பார்த்தசாரதி; தலைவர்: எஸ். சாமிநாதனார்; திறப்பாளர்: அறிஞர் அண்ணா; பேசுவோர்: பி. இராமமூர்த்தி எம்.பி., இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., டி. எஸ். பட்டாபிராமன், ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஏ. பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ., கே. டி. கே. தங்கமணி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-18), அச்சிட்டு வெளியிடப்படுகிறது.